# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி: 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

வெளியீடு எண். 3 நாள் 29.05.2019

**உள்ளாட்சித் தேர்தல்களுக்கு வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கான பயிற்சி**

உள்ளாட்சி சட்ட விதிகளின்படி, சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களின் அடிப்படையிலேயே ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல்கள் தயார் செய்யப்பட வேண்டும். இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கிய மக்களவை தேர்தல் வரையிலான வாக்காளர் பட்டியல்களை, 1,19,270 ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி வார்டுகள் வாரியாகப் பிரித்து, ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களின் சட்டவிதிகளின்படி புகைப்படத்துடன் கூடிய புதிய வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

இதற்கான வாக்காளர் பட்டியல் இந்திய தேர்தல் ஆணையத்திடமிருந்து மென்பொருள் வடிவில் சட்டப்பேரவைத் தொகுதி வாரியாக ஏப்ரல் 2019இல் பெறப்பட்டு தேசிய தகவலியல் மையத்திடம் (NIC) மாநில தேர்தல் ஆணையம் ஒப்படைத்தது. மக்களவைக்கு வாக்களித்த தமிழ்நாட்டை சார்ந்த 5.86 கோடி வாக்காளர்களை, அவரவர் வசிக்கும் உள்ளாட்சி அமைப்பு வாரியாகவும், அவ்வுள்ளாட்சி அமைப்பில் உள்ள வார்டு வாரியாகவும் பிரித்து, அந்தந்த உள்ளாட்சி அமைப்பிற்கான வாக்காளர் பட்டியல் தனித்தனியே தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஊரகம், நகராட்சி, பேரூராட்சி மற்றும் சென்னை மாநகராட்சி ஆகியவற்றிலிருந்து தலா 2 பயிற்றுநர்களைத் தேர்வு செய்து, தேசிய தகவலியல் மையம், அவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் தயார் செய்ய 28.05.2019 மற்றும் 29.05.2019ல் காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலைநகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளித்தது. பயிற்சி பெற்ற பயிற்றுநர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்பிற்கும் ஒருவார காலத்தில் பயிற்சி வழங்கிட அறிவுறுத்தப்பட்டது.

இப்பயிற்சியில் 31 மாவட்டங்கள் + 1 சென்னை மாநகராட்சி சேர்ந்த, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அலுவலகங்களில் பணிபுரியும் கணினி தொழில் நுட்ப பணியாளர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (ஊராட்சித் தேர்தல்கள்) மற்றும் மாநில தேர்தல் அலுவலர்களது அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதன்மைப் பயிற்றுநர்களுக்கான இப்பயிற்சியை, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் இரா. பழனிச்சாமி, இ.ஆ.ப.,(ஓ), அவர்கள் மற்றும் ஆணையத்தின் செயலர் திரு. த.சு. இராஜசேகர், இ.ஆ.ப., ஆகியோர் துவக்கி வைத்தார்கள். முதன்மை தேர்தல் அலுவலர், துணை முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சி), துணை முதன்மை தேர்தல் அலுவலர்(ஊராட்சி) மற்றும் அலுவலர்கள் இப்பயிற்சியினை ஒருங்கிணைத்தனர்.

தேசிய தகவலியல் மைய முதுநிலை இயக்குநர் திரு கே. ஜெயபாலன், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய கணினி நிரலர் திரு. எஸ்.விஜயராமன் ஆகியோர் இப்பயிற்சியினை வழங்கினார்கள்.

29/5/19

மக்கள் தொடர்பு அலுவலர்